## மூளை முடக்கு வாதம் (Cerebral Palsy) சிகிச்சை முறைகளைப் பார்ப்போம்.

மூளை முடக்கு வாதம் (Cerebral Palsy) ஆனது முற்றாக குணப்படுத்த முடியாது. மூளை முடக்கு வாதம் (Cerebral Palsy) என்பது ஒரு குழந்தை பிறப்பின் போது அல்லது பிறந்த பின் ஏற்படும் குறைபாடு. இதனை சரியான பயிற்சிகள் மூலம் மேலும் வலுவடையாமல் குறைத்துக் கொள்ளலாம். அதாவது இவர்களுடைய தசைகளின் அநாவசிய அசைவுகளை குறைத்துக் கொள்வதுடன் தொடர்பாடல் (Communication Skills) முறைகளை விரிவாக்கம் செய்யலாம். இவைகளை இவ் மூளை முடக்கு வாதம் (Cerebral Palsy) குழந்தைகளிடையே பயிற்சி அளிப்பதற்கு Physiotherapy ,Occupational Therapy, Speech therapy ஆகிய மூன்றும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இக்குழந்தைகளை சிறிய வயதில் அதாவது இவர்களை 9-12 மாதங்களிடையே இனம் கண்டு அவர்களுக்குரிய பயிற்சியினை வழங்குவதன் மூலம் குறைபாட்டின் வலுவினைக் குறைக்க முடியும்.
சிறுவயதில் மூளையில் வளர்ச்சி வேகமாக இருப்பதனால் பயிற்சியினை வழங்குவதன் மூலம் குழந்தைகளும் எளிதில் பழகிக் கொள்ளுவர்.

- அனேகமான மூளை முடக்கு வாதம் (Cerebral Palsy) குழந்தைகளுக்கு தசைகள் இறுக்கம்.கூடிய அசைவுகளையும் கொண்டிருப்பதனால் அதனை கட்டுப்படுத்தி இயல்பான நிலைக்கு கொண்டுவருவதற்கு சில மருந்துகளை உபயோகப்படுத்துவதுடன் Physiotherapy கிரமமாக செய்வதனால் உடற்கட்டமைப்பினை சீராகப்பேணுவதுடன், தசைகள் மேலும் இறுக்கமடையாமல் பாதுகாக்க முடியும்.
- Occupational Therapy மூலம், இக்குழந்தைகள் நாளாந்தம் செய்யும் நடவடிக்கைகளை செய்வதற்கு சிரமப்படுவர்கள் இதனை இக்குழந்தைகளின் இயல்பான விளையாட்டுடன் உற்சாகப்படுத்தி அவர்களை தன்னிச்சையாக செயற்பட பயிற்சி அளிக்கப்படுகின்றது.
- Speech therapy மூலம் சீராக பேசுவதற்கு, உணவு உண்பதற்கு, குடிப்பதற்கு, உணவு விழுங்குவதற்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றது.
- இன்னொரு முறையாக (Conductive Education) இவ் மூளை முடக்கு வாதம் (Cerebral palsy) குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றது. இது ஒரு கல்வி முறையாகும். இதன் மூலம் உடலுக்கு பயிற்சி வழங்குவதுடன் கல்வியினையும் புகட்டுகின்றது. இதனை வயது வந்தவர்களும் பெறலாம்.
- சாதாரண மனிதர்களைப்போன்று தங்களுடைய கடமைகளை கொஞ்சம் சிரமத்துடனும்,கடினமாகவும் முயற்சிப்பதனால் சமூகத்துடன் மேற்குறிப்பிட்ட பயிற்சியாளர்களின் உதவியுடன் சமூகத்துடன் இணைந்து வாழப்பழகிக்கொள்ள முடியும்.

## மூளை முடக்கு வாதம் (Cerebral Palsy) குழந்தைகளுக்கு நீங்கள் செய்ய வேண்டியவை

- உங்களுடைய குழந்தை அல்லது உங்களுக்கு தெரிந்தவர்களுடைய குழந்தை இவ்வாறு இருப்பின் எங்களுடைய தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொண்டு அவர்களை எங்கள் அமைப்பில் பதிவு செய்து கொள்ளவும்.
- எங்கள் தொலைபேசி எண் 0117226326
- எங்களுடைய நோக்கத்தினை மற்றவர்களுக்கு கூறுவதுடன் உங்களின் உணர்வுகளையும், உங்கள் குழந்தையின் நிலைமைகளைக் கூறி அதற்குரிய ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
- பெற்றோர்களும், குழந்தைகளும் இவ்வமைப்பில் நடாத்தப்படும் கருத்தரங்குகள் பயிற்சி பட்டறைகளில் கலந்து கொள்ளலாம்.

இந்நிறுவனமானது இயங்கும் இடம்.
**"Cerebral Palsy Lanka Foundation"**
இல.7 கப்டன் கெலும் ராஜபக்ஸ மாவத்தை, வத்தளை.
தொ.எண். 011 7226326, 0717777355
www.cplanka.org



The Dream
Center for Children with Cerebral Palsy

C P L F

# සෙරිබ්‍රල් පල්සි ලංකා ෆවුන්ඩේෂන්
# செரிபரல் பால்சி லங்கா பௌண்டேசன்
# Cerebral Palsy Lanka Foundation

